**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அதன் நடவடிக்கைகள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக் கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகமானது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக் கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழக நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும்

பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகமானது செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழக பேரவையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகமானது இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகமானது அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழக வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான பணப்பாயச்சலாக நடைமுறை அல்லா கடன்களின் மாற்றம் ரூபா 582,273 கணக்கிடப்பட்டுள்ளது. இதன்காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் பணப்பாய்வின் விளைவு இதே பெறுமதியால் குறைக்கப்பட்டுள்ளன. | ஒரு மேற்பார்வை மூலம் செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான பணப்பாயச்சலாக நடைமுறை அல்லா கடன்களின் மாற்றம் ரூபா 582,273 காட்டப்பட்டுள்ளது. காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதில் சரியான அக்கறை செலுத்துவதற்கு கருத்துரைகள் கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | வாகனங்கள், உபகரணங்கள், மற்றும் ஏனையவற்றின் புனர்நிர்மானம் ரூபா 25,027,908 நடைமுறை அல்லா சொத்துக்களின்கீழ் கட்டடங்களின் பெறுமதியாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக கட்டடங்களின் அளவு இதே பெறுமதியால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | பயன்பாட்டிலுள்ள வாகனங்கள், உபகரணங்கள், மற்றும் ஏனையவற்றின் புனர்நிர்மானம் தனியான கணக்குகளில் பராமரிக்கப்பட்டிருப்பினும் நிதியறிக்கைகளில் இவற்றை வெளிப்படுத்தும் போது அவை கட்டடங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தனியான சொத்து வகையின் கீழ் புனர்நிர்மான வேலைகளை காட்ட சரியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கட்டிட மதிப்பு தனித்தனியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் படி ரூபா 53,184,556 பெறுமதியான நூலகபுத்தகங்கள் குறித்த வருடாந்த மெய்யையாய்வு பல்கலைக்கழக முகாமையினால் 30 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்படவில்லை. | மெய்மையாய்வினை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு புத்தகத்தையும் சரிபார்த்து சரிபார்ப்பின் அடையாளத்தைக் குறித்துள்ளனர். 250,000 மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால இதழ்கள் பலஇடங்களில் காணப்படுகின்றன. | மெய்மையாய்வு தவறாமல் நடத்தப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற அலுவலகர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 859,291 ஆபத்துக்கடன் நிலுவை 5 ஆண்டுகளுக்கும் மேலாக அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நிதியறிக்கைகளில் பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | சம்பளமற்ற விடுமுறை, பதவி விடுமுறை, சேவையை இடைநிறுத்தல், ஓய்வுபெறுதல் போன்ற காரணங்களால் கடன்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படுகின்றன. ஆயினும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தை விடுவிக்கும் போது இதனை ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அறவிடுவதற்கு தெளிவான கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளை நாங்கள் கொண்டிருக்கிறோம். | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட 03 மீளளிக்கத்தக்க வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 166,500 ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படாமல் பொதுவைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | மீளளிக்கத்தக்க வைப்புத்தொகையை அந்தந்த மாணவர்களுக்கு உடனடியாக திருப்பிச் செலுத்த ஒரு தெளிவான பொறிமுறையை எடுத்துள்ளோம். பாடநெறி முடிந்த காலத்திலிருந்து 05 ஆண்டுகளுக்குள் தொடர்புடைய மாணவர் வைப்புத்தொகையை கோரவில்லையாயின் அத்தொகையை பல்கலைக்கழக அபிவிருத்தி நிதிக்கு மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். | குறித்த விடயத்தை சரிசெய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னாள் உதவி பதிவாளர் 1998 இல் இளைப்பாறிய வேளையில் பதில் கடமைக்குரிய சம்பளம் செலுத்தப்படாததால் 18 ஆண்டுகளாக பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதற்காக ரூபா 344,560 வட்டித்தொகையுடன் சேர்த்து ரூபா 470,650 நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த வழக்கு 1998 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னாள் உதவி பதிவாளர் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தனது பதில் கடமை சம்பளத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. இந்த வழக்கிற்கான தீர்ப்பு 2017 இல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மேலும் தீர்ப்பு மற்றும் பேரவையின் ஒப்புதலின் அடிப்படையில் முன்னாள் உதவி பதிவாளருக்கு 2018 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த வகை பிரச்சனைகளைத் தடுக்க முகாமை சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்திலிருந்து பெறப்பட்ட நிதியில் பல்கலைக்கழக அதிகாரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 100,000 முற்பணம் 05 ஆண்டுகளுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது நிதியறிக்கைகளில் முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 476,135 விநியோக முற்பணம், வழங்கல் முற்பணம், பிரயாண முற்பணம் மற்றும் சில்லறை காசு கட்டுநிதி போன்ற முற்பணங்கள் 2019 யூன் 30 வரை தீர்க்கப்படவில்லை. | எந்த தாமதமும் இன்றி முற்பணம் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட ஊழியர் முற்பணத்தை தீர்க்க தவறினால் சம்பளத்திலிருந்து மீட்பு செயன்முறை உடனடியாக செய்யப்படும். | வழங்கப்பட்ட நோக்கம் முடிந்தவுடன் முற்பணம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 267 | பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 9,432 தடவைகள் அவர்களிடமிருந்து ரசீதுகள் பெறப்படாமல் சம்பளம் செலுத்தப்பட்டது. | மாற்று வழிகளைத் தேடும் இந்த விடயம் நீண்டகாலமாக கலந்தாலோசிக்கப்பட்டது. இப்போது அனைத்து துறைகளுக்கும் சம்பள சீட்டுக்களை அனுப்பவும், எவ்வித | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாமதமும் இன்றி மாதந்தோறும் கையொப்பத்தைப் பெறவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். | |
| (ii) நிதி ஒழுங்கு விதி 272(3) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மாதந்தோறும் கணக்காய்விற்கு அனுப்ப வேண்டுமென்றாலும், அவை சம்மந்தப்பட்ட மாத முடிவிலிருந்து ஆறு வாரங்களுக்கு பிந்தாமல் அனுப்பப்பட வேண்டும். அத்தகைய உறுதிச்சீட்டுக்கள் அதற்கேற்ப கணக்காய்விற்கு அனுப்பப்படவில்லை. | கடந்த காலத்தில் கணக்காய்வாளர் கோரிய போதெல்லாம் பணம் செலுத்தப்பட்டவுடன் உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டன. எதிர்காலத்தில மாதந்தோறும் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (iii) நிதி ஒழுங்கு விதி 371(5) | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 198 முற்பண கொடுப்பனவுகளில் 182 கொடுப்பனவுகள் உரிய தேதிகளில் தீர்ப்பனவு செய்யப்படவில்லை. மற்றும் தீர்ப்பனவின் காலதாமதம் 3 முதல் 10 மாதங்கள் வரை பரந்திருந்தது. | நிகழ்வு முடிந்தவுடன் விரைவில் முற்பணங்களை தீர்க்க கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளோம். தீர்க்கப்படாத முற்பணங்களைக் கண்காணிக்க நெருக்கமான மேற்பார்வை பொறிமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் நிலுவை ஏதேனும் இருக்கும் போது அந்த நபர்களிடமிருந்து அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உப முற்பணம் வழங்கப்பட்ட நோக்கம் முடிந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |

**(ஆ) பொது முயற்சிகள் சுற்றுநிரூபம்**

| | | | |
|---|---|---|---|
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 இன் பிரிவு 6.5.3 | 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2019 யூன் 20 ஆம் திகதிவரை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட வில்லை. | ஏற்கனவே 2017 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் 2019 யூன் 28 அன்று உயர்கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை விதிமுறைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) 2005 யூலை 01 ஆம் திகதிய பிஈடி/31 | ஓவ்வொரு காலாண்டிலும் குறைந்தது ஒரு கூட்டத்தை நடத்த வேண்டுமென்றாலும் மீளாய்வாண்டில் நான்காம் காலாண்டில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டில் நாங்கள் 05 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளோம். உதவி உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் 2018 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தை நடத்த முடியவில்லை. | சுற்றறிக்கை விதிமுறைகளுடன் இணங்குதல் வேண்டும். |

**(இ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் வருடாந்த மெய்யையாய்வு 06 மாதங்களுக்கு மேலாக தாமதமடைந்திருந்தது. | பின்வரும் காரணங்களால் வருடாந்த மெய்யையாய்வு 06 மாதங்களுக்கு மேலாக எடுத்துள்ளது.<br>கல்வி நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.<br>2018 ஆம் ஆண்டில் கல்விசாரா ஊழியர்களின் நாடளாவிய தொழற்சங்க நடவடிக்கை.<br>எதிர்காலத்தில் மெய்யையாய்வு சரியான நேரத்தில் நடத்தப்படும் | ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் சம்பளம் ரூபா 1,403.8 மில்லியன் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களுக்கு அவர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை விரல்பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டது. | இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் கல்விசார் ஊழியர்கள் பொதுவாக வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடுவதில்லை. எவ்வாறாயினும், 29.09.2012 தேதியிட்ட பேரவையின் 372 ஆவது கூட்டத்தில் இந்த விடயம் கவனத்தில் கொண்டுவரப்பட்டு உலக கல்விசார் ஊழியர்கள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடுவார்களென்று எங்கும் எதிர்பார்க்கப்படவில்லையென சுட்டிக் காட்டப்பட்டது. பீடங்களின் தலைவர்கள் இந்த கருத்தை ஆதரித்தனர். அத்துடன் கல்விசார் துறைத் தலைவர்கள் தங்கள் வரவை உறுதிப்படுத்துவதுடன் அது எப்போதும் அந்தந்த துறைத் தலைவர்களால் கண்காணிக்கப்பட்டது. முன்னைய பாராளுமன்ற பொது முயற்சிகள் கூட்டத்திலும் இது உயர்த்தப்பட்டது. | ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (iii) 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை | விரல் பதிவு வருகை ஊடாக வேலை நேரத்தை உறுதிப்படுத்தாது ஊழியர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 5,480,177 செலுத்தப்பட்டது. | முன்னதாக அனைத்து ஊழியர்களுக்கும் விரல் பதிவு முறைமை கிடைக்காததால் கையேடு வருகையின் அடிப்படையில் மேலதிக நேரம் செலுத்தப்பட்டது. சுற்றறிக்கையின் படி மேலதிக நேரத்தை செலுத்த தற்போது சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரல் பதிவு வருகை மூலம் மேலதிக நேரங்களை உறுதிப்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 717,788,058 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 443,649,262 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 274,138,796 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. தனிப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் நுகர பொருட்கள், பராமரிப்பு செலவு மற்றும் ஒப்பந்த என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதுகாப்பு அதிகாரிகளுக்கான பதவி வெற்றிடங்கள் 2017 ஏப்ரல் 05 இல் மேலதிக நேரக் கொடுப்பனவைக் குறைக்கும் நோக்கத்துடன் நிரப்பப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டில் பாதுகாப்பு காவலர்களுக்கு செலுத்தப்பட்ட மேலதிக நேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,500,174 அல்லது 24 வீதத்தால் அதிகரித்து இருந்தது. | தற்போது பல்கலைக்கழகங்களில் 53 பாதுகாப்பு ஊழியர்கள் மட்டுமே உள்ளனர். மேலும் இந்த பணியாளர் திறன் முழு பல்கலைக்கழகத்தையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. எனவே பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்கள் மேலதிக நேரம் பணியாற்றுவது முக்கியம். பாதுகாப்பு சேவை தவிர்க்க முடியாதது, அது எந்த இடைவெளியும் இல்லாமல் வழங்கப்பட வேண்டும். இதன் விளைவாக மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரிக்கும். இருப்பினும் பதவித் தேவையை அதிகரிக்க நிர்வாகம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. | தேவைக்கேற்ப பல்கலைக்கழகத்தின் பணியாளர் நிலை அதிகரிக்கப்பட வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணணிகள் மற்றும் பல்லூடகக் கருவிகளின் இழப்பை அறவிட பேரவை முடிவு செய்திருந்தாலும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து பல்கலைக்கழக நிர்வாகம் ரூபா 289,600 இழப்பை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. | ரூபா 190,900 மதிப்புள்ள கணணிகளின் இழப்பை துறைத்தலைவரிடமிருந்து மீட்க பேரவை முடிவு செய்தது. இந்த பேரவை முடிவுக்கு அவர் உடன்படாததால் இந்த விடயம் பேரவையால் சட்ட விவகாரங்களுக்கான குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் சட்ட விவகாரங்களுக்கான குழுவின் அறிவுறுத்தலால் எதிர்பார்க்கப்படும்.<br>இழந்த மல்டிமீடியாக்களின் பெறுமதியை மீட்டெடுக்க பேரவை முடிவு செய்தது. மற்றும் நிர்வாகம் ஏற்கனவே இது தொடர்பான ஒப்புதல் கடிதத்தை பொறுப்பான நபருக்கு அனுப்பியது. ஒப்புதல் கடிதம் கிடைத்தவுடன் அந்த ஊழியரிடமிருந்து உடனடியாக தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்பை அறவிட சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாடுகளுக்கு புலைமைப்பரிசில் பெற்றுச் சென்ற பல்கலைக்கழகத்தின் 91 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் புலைமைப்பரிசில் காலம் முடிவடைந்த பின்னர் மீள திரும்பியோ அல்லது கடமைக்கு அறிக்கையிட்டோ இருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழகமானது 1987 ஆம் ஆண்டிலிருந்து 2019 காலப்பகுதிக்குள் உடன்படிக்கை மீறியவர்களிடமிருந்து கூட்டுமொத்தம் ரூபா 68 மில்லியன் பெறுமதியான பிணைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணைகள் மற்றும் ஒப்பந்தங்களின் கடப்பாடுகளை மேம்படுத்த பேரவையின் வழிகாட்டலுடன் பிணை மற்றும் ஒப்பந்தக் குழுவால் பல்வேறு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக கடந்த காலங்களில் பிணைகளை மீறியவர்களின் எண்ணிக்கை மற்றும் நிலுவைத் தொகை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. தற்போது மொத்த நிலுவையில 91 எண்ணிக்கையான பிணையாளர்கள் மட்டுமே ரூபா 68 மில்லியன் கடன் பிணைகளை தீர்க்க வேண்டியுள்ளது. பிணைகள் மற்றும் ஒப்பந்தங்களின் கடப்பாடுகள் குழு அவர்களை தொடர்ந்து பரிசீலித்து வருகின்றது. மேலும் இது தொடர்பாக எதிர்காலத்தில் கடப்பாடுகளை குறைப்பதற்கான, சட்டத் தேவைகளை ஆராய்வதற்கான அனைத்து நடைமுறைகளையும் நெறிமுறைப்படுத்தி கொள்கைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | குறித்த விடயத்தை சீர்செய்ய தகுந்த நடவடிக்கைகள் பல்கலைக்கழக முகாமையால் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட யூஎஸ்டி 9,328 பெறுமதியான பருவகால வெளியீடுகள் பல்கலைக்கழகத்தால் 2019 மே 31 வரை பெறப்பட்டிருக்கவில்லை. | வெளியீடுகளுக்கான கொடுப்பனவுகளை கட்டுப்படுத்த ஏற்கனவே கட்டுப்பாட்டு வழிமுறை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு வருட காலத்திற்குள் வழங்குனர் பருவகால வெளியீடுகளை வழங்கத் தவறினால் அடுத்த வெளியீட்டு கட்டணத்திலிருந்து வெளியீட்டு | குறிப்பிட்ட கால இடைவெளியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியை கழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | பல்கலைக்கழகங்களுக்கான உலக தரப்படுத்தலுக்கு அமைய சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் வெளியீடு செய்த பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தலில் பல்கலைக்கழகமாது மீளாய்வாண்டில் இலங்கை பல்கலைக்கழகம், சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கிடையில் முறையே 8 ஆம் மற்றும் 4,384 ஆம் தரவரிசையைப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும் சர்வதேச தரவரிசை 4,560 ஆம் இடத்திலிருந்து முன்னேறியிருந்தாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலங்கைத் தரவரிசை 7 ஆம் இடத்திலிருந்து குறைந்துள்ளது. | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 2017 ஆம் ஆண்டில் பராமரிக்கப்படுவதால் 7 ஆவது இடத்தைப் பெற்றிருந்தது. இருப்பினும் 2018 ஆம் ஆண்டில் 7 ஆவது இடத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மீண்டும் 2019 ஆம் ஆண்டில் 7 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. 2018 ஆம் ஆண்டில் தரவரிசை வீழ்ச்சியடைந்தமைக்கு பல்கலைக்கழக இணையத்தை முழுமையாக பதிவேற்றாமை அல்லது புதுப்பிக்காமை முக்கிய காரணமாக அமைந்தது. இதனை பல்கலைக்கழகத்தை தரவரிசைப்படுத்த வெப்மற்றிக்ஸ் பயன்படுத்துகின்றது. | பல்கலைக்கழகத்தின் தரவரிசையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட கற்கைநெறிக்கான மொழிமூலம் பல்கலைக்கழகத்தால் பட்டச்சான்றிதழினை உறுதிப்படுத்தி வழங்கப்படும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த கடிதங்களில் போதிய தகவல்கள் இல்லாமையினால் அத்தகைய உறுதிப்படுத்தல் கடிதங்கள் பல தடவைகள் திருப்பி அனுப்பப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | பேரவையின் அனுமதியுடன் பட்டச்சான்றுதலின் அறிக்கையில் கற்கைநெறிக்கான மொழிமூலத்தை உள்ளடக்கி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் தற்பொழுது கற்கைக்கான பட்டியலில் கற்கைநெறி மொழிமூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கற்கைநெறியின் முடிவில் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்றது. | கற்கைநெறிக்கான மொழிமூலம் பட்டச்சான்றுதலின் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தால் ரூபா 43,577,638 ஆராய்ச்சியாளர்களுக்கு செலுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சிகளின் திட்டமிடப்பட்ட காலம் முடிவடைந்திருப்பினும் கிட்டத்தட்ட 50 சதவீதத்திற்கும் மேலதிகமான ஆராய்ச்சி செலவுகள் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தாலும் அவற்றின் செயற்பாட்டு மற்றம் அந்த ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் பல்கலைக்கழகத்திற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை ஆராய்ச்சியாளர்களால சமர்ப்பிக்கப்படவில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கை இப்போது சமர்ப்பிக்கப்படுகின்றது. | ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய இறுதி அறிக்கைகளை வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சி காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகள் முகாமையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 ஆம் ஆண்டில் 403 இருப்பு பொருட்களை மெய்மையாய்வுக் குழு சரிபார்க்கவில்லை. | இருப்பு பதிவேட்டை சமப்படுத்தவும் சொத்துக்களை நகர்த்துவதுடன் தொடர்புடைய பிற ஆவணங்களை வைத்திருக்கவும், பராமரிக்கவும் அனைத்து முகாமைத்துவ உதவியாளர்களும் வேண்டப்படுகிறார்கள். பேரவையால் அனுமதிக்கப்பட்ட ஏலப்பொருட்கள் அடுத்த மெய்மையாய்விற்கு முன்பு அகற்றப்படும். | ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின்படி பரீட்சை முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். இருப்பினும் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களின் கீழ் நடத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளுக்கான பரீட்சைத் திகதிகள் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய திகதிகள் முன்கூட்டயே தீர்மானிக்கப்படவில்லை. மேலும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் பல்கலைக்கழகத்தின் பீடங்களில் 02 தொடக்கம் 11 மாதங்கள் வரை கணிசமான காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | முன் பெறுபேறு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் பெரும்பாலான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இறுதிப் பெறுபேறுகள் இரண்டாவது காலாண்டு அல்லது ஆண்டு அடிப்படையில் வெளியிடப்படும். பீடங்களின் பீடாதிபதிகளுக்கு நினைவூட்டல்களை அனுப்புவதன் மூலமும் பெறுபேறுகளை வெளியிடும் நிலை குறித்த மாதாந்த அறிக்கைகளை செனட்டில் சமர்ப்பிப்பதன் மூலமும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி மூன்று மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தமிழ், நுண்கலை, சமூகவியல், மனித வள முகாமைத்துவம், கணக்கியல், நிதி முகாமைத்துவம், மற்றும் வணிகம் ஆகிய துறைகளின் கற்பித்தல் மற்றும் செயல்முறை விரிவுரைகளுக்கு ஒதுக்கப்பட்ட 12,660 மணித்தியாலங்களில் | பயன்படுத்தப்படாத மணித்தியாலங்கள் பல்கலைக்கழக மாணவரின் கல்வி மற்றும் கற்கை நெறியின் தரத்தை பாதிக்காதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | விரிவுரையாளர்கள் பாடத் திட்டத்திற்கமைய கல்விசார் விரிவுரைகளை நடத்த வேண்டும். |

2,380 மணித்தியாலங்கள் கல்விசார் விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.5 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தடுத்துவைக்கப்பட்ட நிதி மற்றும் குறிப்பிட்ட ஒதுக்கம் என நிதியறிக்கைகளில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள நான்கு உருப்படிகளின் நிலுவைத் தொகை ரூபா 1,990,474 எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக குறித்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படாது காட்டப்பட்டுள்ளன. | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பல்வேறு நோக்கங்களுக்கு நிதியைப் பெறுகின்றது. அந்தந்த பேரேட்டுக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட தொகையை நாங்கள் பெறும் போது அத்தகைய நிதி குறுகிய கால முதலீட்டு அடிப்படையில் நிலையான வைப்புக்களில் வைக்கப்படும். முதலீட்டிலிருந்து பெறப்படும் வட்டி கணக்குகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நன்கொடையாளர்களால் குறிப்பிடப்பட்ட நிகழ்வு நிகழும் போது குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது.<br>நன்கொடையாளர் எந்தவொரு நோக்கத்தையும் குறிப்பிடாமையினால் குறித்த நிதி ரூபா 1,990,474 எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்கும் இன்னும் பயன்படுத்தப்படவில்லை.<br>நன்கொடையாளரிடமிருந்து அறிவுறுத்தல் படிவம் கிடைத்தவுடன் நாங்கள் பயன்படுத்த நடவடிக்கை எடுப்போம். | எந்தவித தாமதமுமின்றி குறித்த நிதி குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பீட தொகுதி ஏ (நிலை 1) இன் ஒப்பந்தத்தை முடிவுறுத்திய போது ரூபா 574,264 பெறுமதியுள்ள கட்டுமானப் பொருட்கள் ஒப்பந்தக்காரரால் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் அதே ஒப்பந்தத்தை ஒரு புதிய ஒப்பந்தக்காரருக்கு மீண்டும் வழங்கம் போது அந்த கட்டுமானப் பொருட்கள் இழக்கப்பட்டுள்ளன. | வேறுபாட்டிற்கான முக்கிய காரணம் பொருட்களின் அளவீட்டை எடுக்கும் போது கணக்கீட்டில் ஏற்பட்ட தவறாகும். பொருட்கள் தவறான அளவீட்டில் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன. அளவீட்டு அறிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அது விரைவாக சரி செய்யப்படும். | கணக்கீடு மற்றும் அளவீடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமானது. |
| (ஆ) | கைதடி சித்த மருத்துவ பிரிவு மூன்று மாடி கட்டிடமாக ரூபா 88.3 மில்லியன் கட்டுமான செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த கட்டுமான செலவில் ரூபா 4,282,910 கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதத்தினால் கட்டுமான கம்பனிக்கு வட்டி மற்றும் வட்டிக்கு வட்டியென செலுத்தப்பட்டது. பெப்ரவரி 2019 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் படி அந்த கட்டடத்திலுள்ள மூன்று ஆய்வுகூடங்கள் மற்றும் மூன்று அறைகளில் இரண்டு ஆய்வுகூடங்கள் மட்டுமே குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டிடத்தில் எங்களிடம் மூன்று ஆய்வுகூடங்கள், இரண்டு விரிவுரை மண்டபங்கள் மற்றும் லொபியுடன் மூன்று அறைகள் உள்ளன.<br><br>இரண்டு விரிவுரை மண்டபங்கள் மற்றும் மூன்று ஆய்வுகூடங்கள் ஜனவரி 2017 இலிருந்து பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய அறைகள் 2019 இலிருந்து நிர்வாக அலுவலகம், ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், பராமரிப்பு பிரிவு மற்றும் சுகாதார அலகு அலுவலகத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. | கட்டடத்தினை குறித்த நோக்கங்களுக்கு முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கு அமைக்கப்பட்ட ரூபா 192.36 மில்லியன் பெறுமதியான கட்டடம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவொரு பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை. | கட்டட தொகுதி ‘சி’ வேலை முடிவடைந்த போதிலும் ஏனைய கட்டட தொகுதி (‘ஏ’, ‘பீ,’ ‘டி’ மற்றும் ‘ஈ’) வேலைகள் முடியவில்லை. மற்றும் ஒப்பந்தத்தை முடிக்க நீண்ட காலமானதால் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டது. இதற்கிடையில் கட்டட தொகுதி ‘சி’ கலைப் பீடத்தின் ஏனைய விரிவுரை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது தொகுதி ‘சி’ மற்றும் ‘டி’, ‘ஈ’ போன்றன முடிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. தொகுதி ‘ஏ’ இதுவரை முடிக்கப்படவில்லை. தொடர்புடைய வேலைகள் முடிவடைந்ததும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் 15.10.2019 இற்குள் புதிய இடத்திற்கு மாற்றப்படும். | கட்டடம் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பயன்பாடற்ற, பயன்படுத்த முடியாத மற்றும் மெதுவாக நகரும் பொருட்கள் முறையே ரூபா 162,431, ரூபா 362,695 மற்றும் ரூபா 175,188 பல்கலைக்கழக களஞ்சியசாலைகளில் 04 முதல் 20 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிகளில் எந்தவொரு நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | பயன்பாடற்ற, பயன்படுத்த முடியாத மற்றும் மெதுவாக நகரும் பொருட்களின் இருப்புக்களைக் குறைக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்பொழுது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது எஞ்சியுள்ள இருப்புக்களின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது. கட்டளை அனுப்புவதற்கு முன்பு களஞ்சியசாலைகளிலுள்ள இருப்புக்களின் கிடைப்பனவினை கருத்திற்கொள்ள ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அத்துடன் களஞ்சியசாலைகளிலுள்ள பயன்படுத்த முடியாத மற்றும் அசைக்க | புதிய பெறுகைக்கு முன்பு பயன்படுத்தக்கூடிய நிலையிலிருக்கும் பொருட்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடியாத பொருட்களைக் கண்டறிந்து அதனைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவிக்க ஒரு குழுவை அமைக்குமாறு கோரியுள்ளோம். | |

### 3.7 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வளாகத்தை வடிவமைத்து நிர்மானிப்பதற்காக ரூபா 202 மில்லியன் செலுத்தப்பட்டது. மேலும் இக் கட்டுமானப் பணிகளை 31 அக்டோபர் 2017 அன்று அல்லது அதற்கு முன்பு முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தாலும் அந்தக் கட்டுமானப் பணிகள் இவ்வறிக்கைத் திகதி வரை முடிக்கப்படவில்லை. | யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கட்டுமானப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக பின்வரும் காரணங்கள் உட்பட 28.02.2019 வரை ஒப்பந்தம் கால நீடிப்புச் செய்யப்பட்டது.<br>- சரளை மற்றும் நதி மணல் பற்றாக்குறை<br>- திட்டமிட்ட வடிவமைப்பில் மாற்றம் மற்றும் கூடுதல் வேலையைச் சேர்த்தமை.<br>- இடைக்கால கொடுப்பனவுகளை செலுத்துவதில் தாமதம்.<br>- பாதகமான காலநிலை.<br>- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் எதிர்பாராத தாமதங்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை. | கட்டுமானப் பணிகள் சரியான நேரத்தில் முடிக்கப்பட வேண்டும். |

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டி 8.10.1 இற்கமைய மீளாய்வாண்டில் செய்துகொண்ட ரூபா 102,255,525 ஒப்பந்தங்களுக்கான பொருட்களின் விபரம், விலைமனு கோரப்பட்ட வேலை, பெறப்பட்ட மொத்த விலைமனுக்களின் எண்ணிக்கை, தெரிவுசெய்யப்பட்ட மனுதாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்ட தொகை பற்றிய விபரங்களை பல்கலைக்கழகம் அதன் வலைத்தளத்திலோ அல்லது வேறு பொருத்தமான ஊடகத்திலோ வெளியிடவில்லை. | பல்கலைக்கழகம் ஒப்பந்த வேலை வழங்குனர்களின் விபரங்களை பல்கலைக்கழக இணையத்தளத்தில் 20.03.2019 வரை வெளியிடவில்லை. ஆனால் இப்பொழுது பல்கலைக்கழக இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எந்த இடைவெளியுமின்றி தொடர்ச்சியாக இதனை மேற்கொள்ள நாங்கள் நெருங்கிய மேற்பார்வை மற்றும் உறுதிப்படுத்தலை கொண்டுள்ளோம். | பெறுகை வழிகாட்டுதல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டுதலின் பிரிவு 6.3.3 இன் படி இரண்டு மனுத் திறப்புக் குழு உறுப்பினர்கள் மனுத் திறப்பில் பங்கு கொள்ள வேண்டும். இருப்பினும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட விரிவுரை மண்டப வளாகத்திற்கான விலை மனுக் குழுக் கூட்டத்தில் ஒரு உறுப்பினர் சமூகமளிக்கவில்லை. | இந்த விலை மனுவைத் திறக்கும் போது மனுத் திறப்பு குழு உறுப்பனர்களில் ஒருவர் மற்ற உறுப்பினருடன் மனுத்திறப்பில் கலந்துகொண்டு தேவையான அனைத்து ஆவணங்களிலும் கையெழுத்திட்டார். ஆனால் மனுத் திறப்பு குழுக் குறிப்பில் கையெழுத்திடுவதற்கு தவறிவிட்டார். எதிர்காலத்தில் இவ்வகைத் தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம். | பெறுகை வழிகாட்டுதல்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 258 கல்விசாரா பதவி வெற்றிடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் ஏழு பீடங்கள் மற்றும் ஏனைய கல்விசார் பிரிவுகளில் பேராசிரியர், துணைப் பேராசிரியர், சிரேஸ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர் போன்ற முக்கிய பதவிகளில் 207 வெற்றிடங்களையும் பல்கலைக்கழகமானது நிரப்பவில்லை. மேலும் வவுனியா வளாகத்தில் 114 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | இந்த கல்விசாரா வெற்றிடங்களில் பெரும்பாலானவை குறைந்ததர ஊழியர்கள் அத்துடன் இவை உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பட்டியலின் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. இப்போது நாங்கள் புதிய அமைச்சுப் பட்டியலைப் பெற்றுள்ளோம். அதற்கமைய 210 வெற்றிடங்களை இரண்டு மாத காலத்திற்குள் நிரப்ப திட்டமிட்டுள்ளோம்.<br><br>தேவையான தகுதிகளுடன் விண்ணப்பங்கள் எவையும் பெறப்படாததால் பேராசிரியர் பதவிக்கான 43 வெற்றிடங்களை பல்கலைக்கழகத்தால் நிரப்ப முடியவில்லை. இந்த நிலைமை அனைத்து பீடங்களின் சில துறைகளில் சிரேஸ்ட விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர்களின் பதவிக்குக் கூட நிலவுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில் கல்விச் செயற்பாடுகளை இடையூறின்றி கொண்டுசெல்லும் பொருட்டு பல்கலைக்கழகம் வெற்றிடமாகவுள்ள பதவிகளை தற்காலிக விரிவுரையாளர்கள், தற்காலிக பயிற்றுனர்களால் நிரப்பியுள்ளது.<br><br>கல்விசாரா குறைந்ததர ஊழியர்களின் வெற்றிடங்களை பூர்த்தயாக்குவதற்கு அமைச்சுப் பட்டியலை நாங்கள் பெற்றுள்ளோம். மேலும் வவுனியா வளாகத்தில் கல்விசாரா ஊழியர்களை பூர்த்தயாக்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்பார்க்கப்பட்ட தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் பொருத்தமான கல்விசார் ஊழியரை எங்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் கல்விச் செயற்பாடுகளை இடையூறின்றி கொண்டுசெல்லும் பொருட்டு வவுனியா வளாகம் வெற்றிடமாகவுள்ள பதவிகளை | வெற்றிடங்கள் காலதாமதமின்றி நிரப்பப்பட வேண்டும். |

தற்காலிக விரிவுரையாளர்கள், தற்காலிக பயிற்றுனர்களால் நிரப்பியுள்ளது.

## 3.10 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 803 இன் படி பல்கலைக்கழகத்தின் வாகனங்களுக்கான சம்பவ நிகழ்வுப் பதிவேடு முறையாகப் பராமரிக்கப்படவில்லை. | வாகனங்களுக்கான சம்பவ நிகழ்வுப் பதிவேட்டினை முறையாகப் பராமரிக்க ஆகஸ்ட் 2018 இலிருந்து பயனுள்ள நடவடிக்கையை எடுத்துள்ளோம். | வாகனங்களை முறையாக மேற்பார்வை செய்து பராமரிக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பிஈடி/12 இன் பிரிவு 6.5.1 மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடித இல எஜி/ஜிஇஎன்/எஸ்இசி/2018/82 ஆகியவற்றின் அடிப்படையில் நிதி அறிக்கைகள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட வேண்டும். எனினும் 2018 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கான பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கைகள் 10 யூன் 2018 இல் மட்டுமே கணக்காய்விற்கு | இது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. முன்னைய ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின் முறைமையில் தவறு ஏற்பட்டுள்ளன. இந்தத் தவறை 02 மாதங்களுக்கும் மேலாக முறைமை வழங்குனர்களால் திருத்த முடியவில்லை. இதன் காரணமாக நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தாமதமானது. எனினும் நாங்கள் தவறை வெற்றிகரமாக சரிசெய்ததுடன் அறிக்கையை தயாரித்து 2019 மே மாத இறுதியில் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளோம். எதிர்காலத்தில் இவ்வகையான தவறுகளைத் தவிர்ப்பதற்கு நாங்கள் முன்னெச்சரிக்கை மற்றும் உரிய | நிதி அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அத்துடன் எதிர்காலத்தில் நிதி அறிக்கைகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 பெப்ரவரி 2014 திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இல 01/2014 இற்கிணங்க 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தொழில் வழகாட்டல் பிரிவு மற்றும் தொழிலாளர் மேம்பாட்டு நிலையத்தின் நடவடிக்கைகள் சேர்க்கப்படவில்லை. | தொழில் வழகாட்டல் பிரிவு மற்றும் தொழிலாளர் மேம்பாட்டு நிலையத்தின் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் கூட்டிணைந்த மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படும். | பல்கலைக்கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் கூட்டிணைந்த மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 15 கணக்காய்வுத் திட்டங்களில் நன்கொடைகள் மற்றும் வெளிநாட்டு நிதி, ஊழியர் கடன்கள், ஊழியர் தனிப்பட்ட கோவைகள் மற்றும் கல்விசார் திட்டங்கள் போன்ற நான்கு (04) திட்டங்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படவில்லை. | ஆண்டின் இறுதிக் காலாண்டில் நாங்கள் உள்ளக கணக்காய்வாளர் இல்லாமல் இருந்தோம். அத்துடன் 2018 ஆம் ஆண்டில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்குவதற்கு மனித வளங்கள் போதுமானதாக இருக்கவில்லை. யூன் 2018 முதல் கணக்காய்வு உதவியாளர்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டனர். அத்துடன் பதில் உள்ளக கணக்காய்வாளர் வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படாது தொடர்ந்த வண்ணமுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய உள்ளக கணக்காய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டில் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையில் 10 முதல் 56 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. இது முகாமைக் கட்டுப்பாட்டின் சிறந்த கருவியாக பாதீடு பயன்படுத்தப்படவில்லை என்பதைக் கருதுகின்றது. | வேறுபாடுகளை மாதாந்த அடிப்படையில நிதிக் குழுவிலும் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வுக் குழுவிலும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்ய முகாமை நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வேறுபாடுகளைக் குறைக்க சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | பயனுள்ள சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட வேண்டும். |